# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 25, 2025

Weekly E-paper • October 25, 2025





# நம்பிக்கை தரும் நவம்பர்!

சுப. வீரபாண்டியன்

## இடியாப்பச் சிக்கலில் இஸ்ரேல்–காசா!

எழில்.இளங்கோவன்

## ஐயோ பாவம்!

தலையங்கம்

## R.S.S.இக்கு அஞ்சல் தலையா?

வெற்றிச்செல்வன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ●திருவள்ளுவர் ஆண்டு 2056, - அக்டோபர் 25, 2025 Weekly E-paper ●October 25, 2025


# நம்பிக்கை தரும் நவம்பர்!

**சுப. வீரபாண்டியன்**

வரும் நவம்பர் 6, 11 ஆகிய நாள்களில் பீகார் சட்டமன்றத் தேர்தல் நடைபெற இருக்கிறது. 14ஆம் தேதி முடிவுகள் வெளிவரும் என அறிவித்துள்ளனர்!

இந்தியா கூட்டணிக்கும், தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கும் இடையில்தான் கடுமையான போட்டி இருக்கிறது என்பதை அறிவோம். இந்தியா கூட்டணியில் ஒரு குழப்பம் நிலவுவதாகவும், 11 இடங்களில் கூட்டணிக் கட்சிகளே நேரடியாக மோதுகின்றன என்றும் செய்திகள் வெளிவந்த போது, ஜனநாயக உணர்வாளர்கள் அனைவருக்கும் அது கவலை தந்தது !



இப்போது நிலைமை மாறி இருக்கிறது!

இந்தியா கூட்டணிக்குள் ஒரு புரிதல் ஏற்பட்டு, காங்கிரஸின் சார்பாளர் அசோக் கெலாட், பீகாரின் அடுத்த முதல்வர் தேஜஸ்வி யாதவ்தான் என்று அறிவித்திருக்கிறார்! இன்னொரு கட்சியிலிருந்து துணை முதல்வர் பெயரும் அறிவிக்கப்பட்டுள்ளது !

தேசிய ஜனநாயகக் கூட்டணியிலோ, நிலைமை வேறு மாதிரியாக உள்ளது. முதலமைச்சர் யார் என்பதைத் தேர்தல் முடிந்த பிறகுதான் அறிவிக்க முடியும் என்று அமித்ஷா கூறியுள்ளார்! அதாவது அடுத்த முதலமைச்சர் நிதிஷ்குமார் இல்லை என்பதை, மறைமுகமாக பாஜக தெரிவித்திருக்கிறது!

தங்களோடு கூட்டணி சேரும் கட்சிகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிட்டு, அந்த இடத்திற்குத் தாங்கள் வந்து விட வேண்டும் என்பதுதான் எப்போதும் பாஜகவின் திட்டம் ! தமிழ்நாட்டில் அதிமுகவை அழிக்கும் முயற்சி நடந்து கொண்டிருப்பதைப் போல, பீகாரில் நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதாதளத்தை அழிக்கத் தொடங்கி விட்டார்கள் என்பதே இதன் பொருள்!

வஞ்சகமான முறையில் அடுத்தவர்களை அழிக்க நினைப்பவர்கள், முதலில் தங்களின் அழிவைத் தேடி கொள்வார்கள் என்பதே வரலாறு சொல்லும் செய்தி !

எப்படியோ, வரும் தேர்தலில் பீகாரில் ஓர் அரசியல் மாற்றம் நடைபெற இருக்கிறது என்பது தெரிகிறது! ஆம், வாக்குத் திருட்டு எப்படி நடைபெற்று இருக்கிறது என்பதை அங்குதானே ராகுல் காந்தி முதலில் அம்பலப்படுத்தினார்! அந்த இடத்திலிருந்து மாற்றம் தொடங்குவது பொருத்தமாகத்தான் இருக்கும் !

எந்தக் கட்சிக்கு எவ்வளவு இடம், யார் அடுத்த முதலமைச்சர் என்பதில் எல்லாம் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, பாஜகவை ஆட்சியில் இருந்து அகற்ற வேண்டும் என்பதில் மட்டுமே முனைப்பு காட்ட வேண்டிய நேரம் இது! இந்தியா கூட்டணி அதனைக் கவனமாகச் செய்து முடிக்கும் என்று நம்புவோம் !

இந்தியாவிற்கான எதிர்கால மாற்றத்தைப் பீகார் தொடக்கி வைக்கட்டும்! பீகாரின் அடுத்த முதல்வர் தேஜஸ்விக்கு நம் அன்பான வாழ்த்துகள்! ●

# இடியாப்பச் சிக்கலில் இஸ்ரேல்–காசா!

எழில்.இளங்கோவன்

அமெரிக்காவில் இரண்டு முறைதான் ஒருவர் அதிபர் தேர்தலில் போட்டியிட்டு அதிபராகலாம். தற்போதைய அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புக்கு இது இரண்டாம் வாய்ப்பு. அடுத்து இனி அதிபராகும் வாய்ப்பு அவருக்கு இல்லை, முடியாது. அதனால் இரண்டாம் தடவை அதிபராக இருக்கும் போதே ஆடுஆடு என்று ஆடிவிட்டுப் போக முடிவு செய்திருக்கிறார் போலத்தெரிகிறது.

’அதோ பாக்கிஸ்தான் சொல்லிவிட்டது, ஏழெட்டுப் போர்களை நானே தடுத்து நிறுத்திவிட்டேன், அதனால் அமைதிக்கான நோபல் பரிசை எனக்குத்தான் தரவேண்டும்’ என்று கிடையாய்க் காத்துக் கிடந்த டொனால்ட் ட்ரம்ப் அதை மரியா கொரீனா மச்சோடாவிடம் பறிகொடுத்து விட்டார்.

இப்போது இஸ்ரேல்-காசா போரை நிறுத்தி அமைதியை ஏற்படுத்துவதற்கு முனைகிறார். அதற்காக 20 அம்சத் திட்டத்தை முன்வைக்கிறார். இஸ்ரேல் இதனை ஏற்றுக்கொண்டது. காரணம், 20 அம்சத்திட்டம் இஸ்ரேலுக்குச் சாதகமாக இருக்கிறது. ஹமாஸ் அமைப்பு இத்திட்டத்தை நிறைவோடு ஏற்கவில்லை. காரணம், அவை நடுநிலையாகத் தயாரிக்கப்படவில்லை என்று குற்றம் சாட்டுகிறது. எனவே ட்ரம்ப் முன்னிலையில் நடந்த அமைதி ஒப்பந்தம் இஸ்ரேல்-ஹமாஸ் இருதரப்பினர் நேரடியாகப் பேசாமல் "கையெழுத்தாகிவிட்டது" என்று அறிவித்தார் ட்ரம்ப்.

இருந்தாலும், இந்த அறிவிப்புகள் சில பிரச்னைகளை உள்ளடக்கவில்லை, இரு தரப்பினரும் அவை குறித்து ஒரு தீர்வை எட்டவில்லை என்றே தோன்றுகிறது.

ஹமாஸின் ஆயுதக் குறைப்பைப் பற்றிய எந்த விளக்கங்களும் ஒப்பந்தத்தில் தெளிவாக இல்லை.

ஹமாஸ் முன்னதாகத் தமது ஆயுதங்களைக் குறைக்க மறுத்துவிட்டது. ஒரு பாலஸ்தீனிய அரசு நிறுவப்பட்டால் மட்டுமே அவ்வாறு செய்ய முடியும் என்று கூறிவிட்டது.

காஸாவின் எதிர்கால ஆட்சி குறித்துத் தெளிவு ஏதும் அந்த அம்சத்தில் இல்லை. ட்ரம்பின் 20 அம்சத் திட்டம், ஹமாஸுக்கு காஸாவில் எதிகாலத்தில் பங்கு இருக்காது என்றும் அந்தத் திட்டவரையறை கூறுவது




எந்த அடிப்படையில் என்பதும் விளங்கவில்லை.

நெதன்யாகு, ட்ரம்பின் திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும் கூட, பாலஸ்தீன அதிகார சபையின் செயல்கள் இதற்கு உடன்படாதது போலத் தோன்றுகிறது.

இஸ்ரேலின் ஆளும் கூட்டணிக்குள் இருக்கும் தீவிர தேசியவாதிகள் பலர் காஸாவில் யூதக் குடியேற்றங்களைப் புனரமைக்க வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள்.

இப்படி ஒரு இடியாப்பச் சிக்கல் இருக்கும் நிலையில் அமைதி ஒப்பந்தம் நிறைவேறியது என்கிறார் ட்ரம்ப். அடுத்த ஓரிரு நாட்களில் ஒப்பந்தத்தை மீறுகிறது இஸ்ரேல். ஹமாஸ் அமைப்பும் எதிர் நடவடிக்கையில் இறங்குவது தவிர்க்க முடியாத தாகி விடுகிறது.

"வடக்கு காஸாவில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் அங்கு செல்வதைத் தாமதப்படுத்துவது, காஸா முனையின் பல்வேறு பகுதிகளில், குண்டுகள் ஷெல் குண்டுகள் குண்டுகள் மற்றும் துப்பாக்கிச் சூடு மூலம் தாக்குதல் நடத்துவது, அந்தப் பகுதியில் வழங்கப்படும் மனிதாபிமான உதவிகளை அனுமதிக்கத் தவறுதல் ஆகியவை இந்த விதி மீறல்களுள் அடங்கும்.” என்கிறது ஹமாஸ். இதையெல்லாம் காதில் வாங்காத ட்ரம்ப் ஹமாசை எச்சரிக்கிறார் அழித்துவிடுவேன், ஒழித்துவிடுவேன் என்று.

உண்மையைச் சொன்னால் இஸ்ரேல்-காசாவில் ட்ரம்ப் தலையீடுதான் அங்கு அமைதி ஏற்படத் தடையாக இருக்கிறது. அவர் வெளியேறினால் அந்தப் பணியை உலக நாடுகள் செய்துமுடிக்கும்.

●

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

கருஞ்சட்டைத் தமிழர்

## ஐயோ பாவம்

நேற்றுகட்சிதொடங்கி,இன்றுஊர்வலம்போய்,நாளை முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்துவிட வேண்டும் என்று கிளம்பிய நடிகர் விஜய், கரூரில் 41 உயிர்கள் பலியான பின்னர் இன்றுவரை எதுவும் பேசவில்லை. நேரில் சென்று அனுதாபம் கூட தெரிவிக்கவில்லை அவர். அவரின் கட்சியில் சிறு சலனம் கூட இல்லை.

ஆனால் கரூர் சம்பவத்திற்குப் பிறகு பெண்களின் ஆதரவு விஜய்க்குப் பெருகிவிட்டது, சிறுபான்மையினர், இளைஞர்கள், பட்டியலினத்தவர்கள் ஆதரவு கூடிவிட்டது, அடுத்தத் தேர்தலை தீர்மாணிக்கப் போகிறவர் விஜய்தான் என்று சில தொலைக் காட்சி ஊடகங்கள் ஊதித்தள்ளுகின்றன.

விஜயைவிட்டால் வேறு வழியில்லை என்று அதிமுக, பாஜக போன்ற கட்சிகள் அவர் வீட்டு வாசலில் நிற்பது போல சொல்கின்றன அவை.

விஜய் வீட்டைவிட்டு வெளியே வரவில்லை. அவரின் வீரமிக்க தளபதிகள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா போன்றவர்கள் தலைமறைவு. மாவட்ட, வட்ட, பகுதி என்று அடிமட்டம் வரை இன்னும் கிளைகள் கூட இல்லாத தவெக என்ற ஒரு கட்சிதான், திமுகவை வீழ்த்தும் வலிமையுடன் இருப்பதுபோலப் பேசுவதற்குக் கூச்சப்பட வேண்டும்.



பாஜகவுடன் கைகோர்த்து தன்னை மதவாத ஆதரவை வெளிப்படுத்தி இருக்கிறது, அதிமுக. தமாகவில் பாவம் இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். இவர்களுடன் விஜய் வந்து சேர்ந்தால் அவரையும் மதவாதஆதரவாளர் என்று மக்கள் நினைக்க மாட்டார்களா?

சரியோ, தவறோ அதிமுகவுக்கும் குறிப்பிட்ட வாக்காளர் இருக்கிறார்கள்.

சும்மா இருக்கும் சங்கை ஊதிக் கெடுக்காமல் இருந்தால்சரி, ஊடகங்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## தமிழ்நாட்டைத் தொடர்கிறது கேரளம்

கேரளா, தந்த்ர வித்யாலயா என்ற அமைப்பு மூலம் அனுபவச் சான்றிதழ் பெற்றவர்களை பகுதி நேர அர்ச்சகர்களாக திருவிதாங்கூர் தேவசம்போர்டு, பணியாளர் போர்டு நியமித்தன. இந்த நியமனத்தை எதிர்த்துக் கேரள உயர்நீதி மன்றத்தில் அகில கேரள தந்த்ரி சமாஜம் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ராஜா விஜயராகவன், கே.வி.ஜெயக்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு "பரம்பரை பரம்பரையாக கோயில் அர்ச்சகரை நியமிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவர்கள்தான் கோயில் அர்ச்சகராக இருக்க வேண்டும் என்பது அவசியமான மத வழக்கம் அல்ல. ஆகவே தந்த்ர வித்யாலயா என்ற அமைப்பு வழங்கிய அனுபவ சான்று அடிப்படையில் குருக்களாக சிலரை நியமித்தது செல்லும்" எனறு 1972ஆம் ஆண்டு சேஷம்மாள் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேற்கோள் காட்டி கேரள உயர்நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கி உள்ளது.




தமிழ்நாட்டில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்று சட்டம் நிறைவேற்றி உள்ளது இங்கு நினைவு கூரத்தக்கது.

# ஆர்.எஸ்.எஸ்.இக்கு அஞ்சல் தலையா?

வெற்றிச்செல்வன்

"நமது சமுதாயத்தின் மற்றொரு விசேஷ அம்சம் நான்கு வருண அமைப்பு ஆகும். இன்று இது ஜாதிவாதம் என்று கூறி, கேலி செய்யப்படுகிறது.

வருண அமைப்பு என்று கூறுவதே கேவலமானது என்று நம் மக்கள் எண்ணுகின்றனர்.....அம்முறைப்படி, பிறருக்கு ஞானம் வழங்குவதன்மூலம் அந்தணன் புகழ் பெறுகின்றான் எனில்,

பகைவனை அழிப்பதினால் சத்திரியன் புகழுடையோனாகப் போற்றப்படுகிறான் என்றும்,

தனது வாணிபத்தாலும், விவசாயத்தாலும் வளம் பெருக்கிய வைசியன் எந்த விதத்திலும் புகழ் குறைந்தவனாகக் கருதப்படுவதில்லை. அதுபோன்றே தனது கைத்திறனால் சமுதாயத் திற்குச் சேவை செய்து வந்த சூத்திரனும் புகழ் மிக்கவனாய்க் கருதப்பட்டு வந்தான்" (ஞான கங்கை எம். எஸ். கோல்வால்கர், பக்கம் 162 163) என்று தனது நூலில் எழுதியவர் ஆர். எஸ். எஸ். அமைப்பின் தலைவர்களுள் ஒருவரான எம்.எஸ்.கோல்வால்கர். அந்த அமைப்பின் நூற்றாண்டு நிறைவடைந்ததை ஒட்டி, அஞ்சல் தலையும் நாணயமும் வெளியிடு கிறார் பிரதமர் மோடி.



சூத்திரன் எப்போது புகழ் மிக்கவனாகக் கருதப்பட்டான்? சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கல்வியைக் கொடுக்காதே என்று சொல்லி வளர்க்கப்பட்ட சமூகமல்லவா இது. மற்ற மூன்று வருணத்திற்கும் அடிமை சேவகம் செய்வதற்காகவே பிறந்தவன் சூத்திரன் என்றுதானே மனுதர்மம் சொல்கிறது. அப்படி இருக்கும்போது, வருணாசிரம தர்மத்தைக் காப்பாற்றும் ஒரு அமைப்பிற்கு அரசாங்கமானது நாணயமும், அஞ்சல் தலையும் வெளியிடுவது நியாயமானதா?

ஆர். எஸ். எஸ். அமைப்பே வருணாசிரம அமைப்பைப் பின்பற்றும் அமைப்புதானே! அதன் நூறாண்டு கால வரலாற்றில் ராஜேந்திர சிங் என்ற ஒருவரைத் தவிர அனைத்துத் தலைவர்களும் பார்ப்பனர்களே. அதுமட்டுமல்ல, 'சுயம் சேவக்குகளாகப் பெண்களை நூறாண்டுகளாக ஏற்க மறுக்கும் அமைப்புதானே ஆர்.எஸ்.எஸ்.

காந்தியடிகளின் கொலையில் ஆர். எஸ். எஸ். அமைப்பின் பங்கு ஊரறிந்த ரகசியமாயிற்றே! மூன்று முறை அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட கலவர அமைப்பு. கடந்த நூறு ஆண்டுகளாக எந்த ஒரு சட்டத்தின்கீழும் பதிவு செய்யப்படாத அமைப்புதான் ஆர். எஸ். எஸ். எந்த வரிவிதிப்பும் இந்த அமைப்பை நெருங்க முடியாது. திரட்டப்பட வேண்டிய நன்கொடைகளை அறிவிக்க வேண்டிய தேவை இல்லை. இதன் சொத்துகளுக்கும் வருமானத்திற்கும் தணிக்கையும் கிடையாது. இப்படிப்பட்ட ஓர் அமைப்பிற்குத்தான் பிரதமரின் பாராட்டும் புகழாரமும்.

அதே நேரத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் இதற்குச் சரியானதொரு எதிர் வினையை ஆற்றியுள்ளார். "நமது இந்தியா, அனைத்து மத மக்களுக் குமான மதச்சார்பற்ற நாடு எனும் அடிப்படைத் தத்துவத்திற்கு வித்திட்டவர் அண்ணல் காந்தியடிகள்!

மக்களிடையே வெறுப்பின் விதைகள் தூவப்பட்டு, பிரித்தாளும் சக்திகள் தலைதூக்கும்போதெல்லாம் அவற்றை எதிர்கொள்ளும் வலிமையை நமக்கு என்றும் வழங்கும் ஆற்றல் அவர்.

நம் தேசப்பிதாவைக் கொன்றொழித்த மதவாதியின் கனவுகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கும் RSS இயக்கத்தின் நூற்றாண்டுக்கு, நாட்டின் தலைமைப் பொறுப்பில் இருப்பவரே அஞ்சல் தலையும், நினைவு நாணயமும் வெளியிடும் அவல நிலையில் இருந்து இந்தியாவை மீட்க வேண்டும்! இதுவே காந்தியடிகளின் பிறந்தநாளில் நாட்டு மக்கள் அனைவரும் ஏற்க வேண்டிய உறுதிமொழி!" என்பது காந்தியடிகளின் பிறந்த நாள் அன்று X தளத்தில் அவர் பதிவிட்டிருக்கும் வரிகள்.

இந்த நாட்டில் ஜாதியவாதத்திற்கும் மதவாதத்திற்கும் ஆதரவாய் இயங்கும் அமைப்புகளை இனம்கண்டு தோலுரிப்போம். தமிழ்நாட்டை நச்சரவ ஆர்.எஸ். எஸ். அமைப்பிலிருந்து பாதுகாப்போம். •

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian